சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

கலை மற்றும் பண்பாடு
அருங்காட்சியகங்கள்
தொல்லியல்

# கொள்கை விளக்கக் குறிப்பு
**2014–2015**

மானியக் கோரிக்கை எண்.**29**

கே. சி. வீரமணி
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
**2014**

| வ. எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | கலை மற்றும் பண்பாடு | 1–50 |
| 2. | அருங்காட்சியகங்கள் | 51–62 |
| 3. | தொல்லியல் | 63–91 |

# கலை பண்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2014 – 2015

## 1. முன்னுரை

இசைக்கலை, நாடகக் கலை, நாட்டியக் கலை, ஓவியம் மற்றும் சிற்பக் கலை ஆகியவற்றை வளர்த்திடவும், பண்பாட்டை வெளிப்படுத்தும் மரபுக் கலைகளை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லவும், இக்கலைகளின் வளர்ச்சிக்காக பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து ஊக்குவிக்கவும், தமிழகத்தின் மரபுக் கலைகளையும், பண்பாட்டினையும் பாதுகாத்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காக " **கலை பண்பாட்டுத்துறை**" என்ற ஒரு தனித் துறை டிசம்பர் திங்கள் **1991** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

## துறையின் செயல்பாடுகள்

**1.1** பல்வேறு அரசு துறைகளின் கீழ் இயங்கி வந்த கலை அமைப்புகளையும், கலை நிறுவனங்களையும், பொதுத்துறையின் கீழ் செயல்பட்ட தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கீழ்

செயல்பட்ட தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் ஆகிய கலை அமைப்புகள், கல்வித்துறையின் கீழ் செயல்பட்ட அரசு இசைப் பயிற்சி மையங்கள், தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த அரசு கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் அரசு சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய அனைத்தும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டன.

**1.2** இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள், ஓவியம் மற்றும் சிற்பம் முதலான கலைகளை கவின்கலைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகழ்த்துக்கலைக் கல்வி நிறுவனங்கள் மூலம் பயிற்றுவித்தல், தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளைப் பேணிப் பாதுகாத்தல், வளர்த்தல் அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், பாரம்பரியக் கலைகள் அழிந்துவிடா வண்ணம் இளைய சமுதாயத்தினருக்கு கொண்டு செல்லுதல் மற்றும் கலைப் பயிற்சி அளித்தல், பொதுமக்களிடையே அக்கலைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கலை நிகழ்ச்சிகளை நடத்துதல், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள்

வழங்குதல், தமிழகத்தின் பண்பாட்டு கலைகளை வெளிமாநிலத்தவரும், வெளிநாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற கலைப் பணிகளை கலை பண்பாட்டுத்துறை சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது.

**1.3** இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ், ஆறு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், நான்கு அரசு இசைக் கல்லூரிகள், பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், ஒரு அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, நாற்பது ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மற்றும் தொன்மை வாய்ந்த கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, நாட்டுப்புறக் கலைஞர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியமும் தனியாகச் செயல்பட்டு வருகின்றது. இத்துறையில் ஒரு இணை

இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஆறு மண்டல உதவி இயக்குநர்கள், ஒரு கணக்கு அலுவலர், ஒரு செயல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் ஆணையருக்கு உதவியாக பணியாற்றி வருகின்றனர்.

## மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

**1.4** காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு இடங்களில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

**1.5** தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க பண்பாடு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்லும் பொருட்டு, மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் கலை விழாக்கள் நடத்துதல், கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், செவ்வியல் கலைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், கலைப்போட்டிகள், கலைப்பயிற்சி அளித்தல் ஓவிய / சிற்ப பயிற்சி மற்றும் கண்காட்சி நடத்துதல், மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், ஜவகர் சிறுவர்

மன்றங்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, மாவட்ட அளவில் அரசின் திட்டங்களை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் செயல்படுத்தி வருகின்றன. மேலும் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்தின் சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு வைகுண்ட ஏகாதசி விழா, தமிழிசை விழா, கார்த்திகை ஒளி விழா, பாவை விழா, சாரல் விழா, சீர்காழி மூவர் விழா, கட்டபொம்மன் பிறந்தநாள் விழா, அருவித் திருவிழா, குமரித் திருவிழா, சதயவிழா, ஆழித்தேர் விழா, கோடை விழா, ஆடிப் பெருக்குவிழா, மத நல்லிணக்க விழா போன்ற கலை விழாக்களை நடத்தி வருகிறது.

**1.6** சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட **ரூ.100.00** இலட்சம் நிதி ஒப்பளிப்பும், திருநெல்வேலி மண்டல கலைப் பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட **ரூ.99.90** இலட்சம் நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டு, தற்போது கட்டடப்பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளது.

## மாவட்டக் கலை மன்றங்கள்

**1.7** பாரம்பரியமிக்க தமிழகக் கலைகளை போற்றிப் பேணிப்பாதுகாத்தல், தொன்மையான தமிழகக் கலை வடிவங்களை மேம்படுத்தி, **கலைத் திறமையுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து விருதுகள் வழங்குதல்** மற்றும் கலைஞர்களின் கலைத் திறமையினை வெளிக்கொணர்தல், மாவட்டங்களில் கலைகளை பரப்புவது ஆகிய பணிகளை மேற்கொள்ள மாவட்டக் கலை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**1.8** ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறன்படைத்த ஐந்து கலைஞர்களுக்கு அவர்களது வயதிற்கும், கலைத் திறமைக்கும் ஏற்றவாறு கலை விருதுகள் வழங்கும் திட்டத்தினை 2002–2003 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது:–

| | | |
|---|---|---|
| 18 வயதிற்குள் | – | **கலை இளமணி விருது** |
| 19 முதல் 35 வயதிற்குள் | – | **கலை வளர்மணி விருது** |
| 36 வயது முதல் 50 வயதிற்குள் | – | **கலைச்சுடர்மணி விருது** |
| 51 வயது முதல் 60 வயதிற்குள் | – | **கலை நன்மணி விருது** |
| 60 வயதிற்கு மேல் | – | **கலை முதுமணி விருது** |

**1.9** மாவட்டந்தோறும் பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் **2002–2003** ஆம் ஆண்டு முதல் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் வழங்கப்படும் அடையாள அட்டைகள் வாயிலாக அரசின் நிதியுதவி பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுவதற்கும் உதவியாக இருக்கின்றன.

## தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

**1.10** தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நோக்கத்திற்காகவும் **தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்** உருவாக்கப்பட்டது. நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் இதுகாறும் **30,161** கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். அவர்களில் **6,791** கலைஞர்களுக்கு ரூ.**1,07,45,000/–** மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## கலைக்கல்வி நிறுவனங்கள்

## இசைக்கல்வி நிறுவனங்கள்

**1.11** இசை, மனிதனை மனிதனாக வாழ வழி செய்து வருகிறது. அத்தகைய தொன்மையான தமிழ் இசை நமது பண்பாட்டினையும், பாரம்பரியத்தினையும் பிரதிபலிக்கிறது. திறன்படைத்த இளம் கலைஞர்களை புகழ்மிக்க இசைவல்லுநர்களாக உருவாக்கிடவும், இளைய தலைமுறையினருக்கு இசைக்கல்வியினை எடுத்துச் செல்லவும், தமிழிசையை மாநிலம் முழுவதும் பரப்பும் நோக்குடன் இசைக் கல்லூரிகளும், இசைப்பள்ளிகளும் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்

**1.12** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி 110– இன் கீழ் இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் ஏற்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சட்டமன்றத்தில் அதற்கான சட்டம் **(Tamil Nadu Music and Fine Arts University Act-2013)** இயற்றப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

அவர்களை வேந்தராகக் கொண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டு, பல்கலைக்கழகம் தற்காலிகமாக சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக கலைமாமணி திருமதி.வீணை ஈ.காயத்ரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆட்சிக்குழுவும் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**1.13** தற்போது, சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் தற்காலிகமாக செயல்படும் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்திற்காக ரூ.3.87 கோடி செலவினத்தில் பொதுப்பணித்துறையால் இசைக்கல்லூரியின் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

**1.14** துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய இடங்களில் செயல்படும் அரசு இசைக்கல்லூரிகளும், சென்னை மற்றும் கும்பகோணத்தில் செயல்படும் அரசு கவின் கலைக் கல்லூரிகளும், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும்

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகளும் இப்பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

**1.15 2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரிகளில் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் இசைவுடன் இளங்கலை பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

**1.16** அரசாணை (நிலை) எண்.194, வருவாய்த் துறை, நாள் 9.6.2014ன்படி காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் கிராமத்தில், 12.72.0 ஹெக்டேர் நிலம் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அரசு இசைக் கல்லூரி, சென்னை

**1.17** சென்னை, அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சீரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், குரலிசையில் (முதுகலை – இசைக் கலைமணி) ஈராண்டு

முதுநிலை பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்பபடுகின்றன.

**1.18** தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் நிதியுதவியுடன் சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கத்தினை பல்நோக்கு கலாச்சார கலை திரையரங்காக மாற்ற புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**1.19** சென்னை அரசு இசைக்கல்லூரியில், கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.**102.98** இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டு, கூடுதல் வகுப்பறைகளும், குடில்களும் பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டு, கல்லூரியின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## அரசு இசைக் கல்லூரி, மதுரை

**1.20** மதுரை, அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள், ஆகியவற்றில்

மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

**1.21** கோயம்புத்தூர், அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.22** கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரிக்கு ரூ.**1.00** கோடி செலவில் சொந்தமாகக் கட்டடம் கட்டப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டதை செயல்படுத்தும் விதமாக, ரூ.**90.91** இலட்சத்திற்கான ஒப்பளிப்பாணை அரசால் வெளியிடப்பட்டு தரைதளமும், அதனைத் தொடர்ந்து, முதல் தளம் கட்டப்பெற ரூ.**98.80** இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, தற்போது இக்கட்டடப்பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளது.

## அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

**1.23** திருவையாறு, அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம்,

நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், குரலிசையில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பும், இரண்டாண்டு முதுகலை பட்ட மேற்படிப்பும் மற்றும் முனைவர் பட்ட ஆய்வு ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

**1.24** திருவையாறு அரசு இசைக்கல்லூரிக்கு முதல் தளத்தில் கட்டடங்கள் கட்டப்பெற ரூ.**61.60** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, கட்டடப் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளது.

**1.25** சென்னை, மதுரை, கோவை, திருவையாறு ஆகிய நான்கு இசைக்கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு படிப்புதவித் தொகையாக மாதம் ரூ.**500/–** வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

## மாலைநேர இசைக்கல்லூரி மையங்கள்

**1.26** மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் சென்னையிலும், மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன. சென்னை, தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகியவற்றிலும், சென்னை, அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம்

ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்

**1.27** தமிழகமெங்கும் தமிழ் இசைக்கல்வியினை கொண்டு செல்லும் நோக்கிலும், இசைக்கல்வியை பரவலாக்கும் பொருட்டும், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இசைப்பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய கலைகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு படிப்புதவித் தொகையாக மாதம் ரூ.400/—வீதம் வழங்கப்பட்டு வருகிறது.**

## கவின்கலை மற்றும் கட்டடக் கல்வி நிறுவனங்கள்

**1.28** தொன்மையான தமிழகத்தின் கலாச்சாரத்தையும், சிறந்த பண்பாட்டினையும் ஓவியங்களும், சிற்பங்களும் உலகிற்கு பறைசாற்றி வருகின்றன. இந்த பொக்கிஷங்கள் இன்றைய இளைய தலைமுறையினருக்கு பண்டைய தமிழக வாழ்க்கையின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் பெருமைகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி தொடங்கப்பட்டது முதல் இன்று வரை புகழ்பெற்ற ஓவியர்களையும், சிற்பிகளையும், உருவாக்கிய பெருமையுடையது.

## அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

**1.29** சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture), மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டுகால

இளங்கலைப் பட்டப்படிப்பும், வண்ணக்கலை, காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு , சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு மற்றும் சிற்பக்கலை ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## அரசு கவின் கலைக்கல்லூரி, கும்பகோணம்

1.30 கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கலை பட்டப்படிப்புகளும், இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

**1.31** காலத்தால் அழிக்க முடியாத, பல்லவர் காலத்துச் சிற்பங்களை பறைசாற்றும் சிற்ப நகரான மாமல்லபுரத்தில், சிற்பக் கலைக்கல்விக்காக அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மரபு

கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக்கலையில் பி.எப்.ஏ. (B.F.A in Traditional Sculpture) மற்றும் மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலையில் பி.எப்.ஏ. (B.F.A in Traditional Drawing and Painting) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

## கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**1.32** அரசின் நிதியுதவியுடன் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி திருச்சிராப்பள்ளியில் அமையப்பெற்று, கல்லூரி கல்வித்துறையின் மூலம் நிதியுதவியும், கலை பண்பாட்டுத் துறையின் கீழ் நிர்வாகமும் என இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் நுண்கலைகளை வளர்க்கும் விதத்தில், பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு பட்டப் படிப்புகளும், மூன்றாண்டு இளநுண்கலைப் பட்டப் படிப்புகளும், இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகளும், முனைவர் பட்ட ஆய்வும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்

**1.33** மைய அரசின், சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களையும், திட்டங்களையும், தொன்மைவாய்ந்த

தமிழகக் கலைகளையும் போற்றிப் பாதுகாக்கவும் மாநில அளவில் ஒரு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில், தமிழக அரசால் **1955** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், முத்தமிழுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில், **1973** ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழக அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் கலைஞர்கள் பயன்பெறும் பொருட்டு பல்வேறு திட்டங்களைச் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்தி வருகின்றது.

## தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணித் திட்டங்கள்

**1.34** தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற திட்டங்களின் மூலம், மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல், தமிழ்நாட்டின் பல்வேறு கலை நிறுவங்களின் மூலம் கலை

நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளிப்பது, அதன் மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும், ஊக்கமும் அளித்தல், கலைத்துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்கு சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்கு '**கலைமாமணி**' என்ற மாநில விருது வழங்குதல் மற்றும் ***"பாரதியார்", எம்.எஸ்.சுப்புலட்சுமி", "பாலசரசுவதி"*** ஆகியோர் பெயரில் அகில இந்திய அளவிலான விருதுகள் வழங்கி சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்து நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நிதியுதவி வழங்குதல், தன்னார்வ கலை நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் நிதியுதவி வழங்குதல், இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பயன்பெறும் நோக்கில் கலைவிழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலையம்சங்களை இளைய தலைமுறையினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளை பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழி கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய கலைப்பணித்

திட்டங்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## கலைமாமணி விருது வழங்குதல்

**1.35** இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், இசை நாடகம், கிராமியக் கலை, சின்னத்திரை போன்ற கலைத்துறையின் மேம்பாட்டிற்காக சிறப்பான முறையில் சேவை செய்து வரும் புகழ்மிக்க கலைஞர்களை பாராட்டிச் சிறப்பு செய்யும் வகையில், தமிழக அரசால் "**கலைமாமணி விருது**" வழங்கப்படுகிறது. இதுவரை 1594 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் கீழ்வருமாறு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

| வ.எண் | துறை | விருது பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயல் | 79 |
| 2. | இசை | 483 |
| 3. | நாட்டியம் | 151 |
| 4. | நாடகம் | 244 |
| 5. | திரைப்படம் | 375 |
| 6. | இசை நாடகம் | 82 |
| 7. | கிராமியக் கலை | 111 |
| 8. | பிற கலைகள் | 45 |
| 9. | சின்னத்திரை | 24 |
| | **மொத்தம்** | **1594** |

## நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

**1.36** அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.**1,000/–**ஆக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி **1.4.2013** முதல் ரூ.**1,500/–**ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் **12063** நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நிதியுதவி பெற்று வருகின்றனர். நலிந்த கலைஞர் நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.**12,000/–**த்திலிருந்து ரூ.**60,000/–**ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்.

**1.37** கலைஞர்களின் மறைவினால், தவிக்கும் குடும்பங்களுக்கு, குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை மொத்தம் **400** மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு ரூ.**17.36** இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்

**1.38** தமிழ் பண்பாட்டு மரபினை பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ளவும், இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை மேம்படுத்தவும், மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சங்கீத நாடக அகாதெமியுடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்திற்கு 82 வெளி மாநிலக் கலைக்குழுக்கள் வருகை புரிந்துள்ளனர். 85 தமிழகக் கலைக்குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வந்துள்ளன.

## வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்

**1.39** தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரவி இருக்கின்ற காரணத்தினாலும், நமது தமிழ் பண்பாட்டினையும், கலைகளையும் வெளிநாடுகளில் உள்ள மக்கள் அறிந்து கொள்ளவும், வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையிலும், அந்நாடுகளில் நடைபெறும் கலை கலாச்சார விழாக்களில், தமிழகத்தின் பெருமைகளை, கலைகளின் வாயிலாக வெளிப்படுத்திட தமிழ்

மண்ணின் பாரம்பரிய கலைகளான பரதநாட்டியம், நாட்டுப்புறக்கலைகள், இசை நிகழ்ச்சிகள் ஆகிய கலைநிகழ்ச்சிகள் வெளிநாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

## திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

**1.40** இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைத்துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை ஊக்குவிக்கவும், தமிழகத்தில் புகழ்பெற்ற தன்னார்வக் கலை நிறுவனங்கள் வாயிலாக கலைத்துறையை பொறுத்து ரூ.2000/– முதல் ரூ.5000/– வரை கலை நிகழ்ச்சிகள் நடத்திட தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நிதியுதவியும் அளிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 1941 இளங்கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## கிராமியக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

**1.41** கிராமியக் கலைஞர்களையும், கலைக் குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க இயல், இசை, நாடக

மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நாட்டுப்புற கலைஞருக்கும் ரூ.750/—ம், ஒவ்வொரு கலைக்குழுவுக்கும் ரூ.2,500/—ம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுவரை 1437 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும் / கலைக்குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## புதிய நாடகங்கள் / நாட்டிய—நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

**1.42** தமிழ்க்கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள், புதிய நாட்டிய—நாடகங்கள் தயாரித்திடவும், நாடகம், நாட்டிய—நாடகங்கள் தயாரித்திட கலைக்குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 42 புதிய நாடகங்கள் மற்றும் 22 நாட்டிய—நாடகங்கள் தயாரித்து மேடையேற்றமும் செய்யப்பட்டுள்ளன.

## அரிய கலை நூல்கள் பதிப்பிப்பதற்கு மானியம் வழங்குதல்

**1.43** இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலை குறித்த நூல்கள் பதிப்பித்து, வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 104 நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

## இயல் இசை நாடக மன்ற கலை விழாக்கள்

**1.44** தொன்மை மிக்க பழம்பெரும் கலைகளை இன்றைய இளம் தலைமுறையினர் கண்டுணர்ந்து, பண்பாட்டினை உணரும் வண்ணமும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணம் இயல் இசை நாடக மன்றம், பல்வேறு கலைவிழாக்களையும், நாட்டுப்புறக் கலை விழாக்களையும் நடத்தி வருகின்றது.

**1.45** மும்பை சண்முகனந்தா கலையரங்கில் தமிழகத்தை சார்ந்த 70 கலைஞர்களை கொண்டு கிராமிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல்சுவை நடனம் ஆகியவை 20.4.2013 மற்றும் 21.4.2013 ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்பட்டது. சென்னையில் கிருஷ்ணகான சபாவில் அவ்வை டி.கே.சண்முகம், எஸ்.வி.சகஸ்ரநாமம், சக்தி டி.கே.கிருஷ்ணசாமி ஆகிய கலை மேதைகளின் நூற்றாண்டு விழா 64 கலைஞர்களை கொண்டு நாட்டியம், நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளின் வாயிலாக சிறப்பாக நடத்தப்பட்டது. சென்னையில் 22.8.2013 முதல் 24.8.2013 வரை மூன்று நாட்கள் 40 கலைஞர்களைக் கொண்டு ஒடிசா மாநிலக் கலை நிகழ்ச்சிகள் ஒடிசி, சம்பல்புரி, கோட்டிபுவா நடனம்

ஆகியவை நடத்தப்பட்டன. சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை 11.1.2014 அன்று ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லத்தில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா கலையரங்கில் மிகச்சிறப்பாக 20–க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

**அகில இந்திய அளவில் இயல், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு விருது வழங்குதல்**

1.46 தேசிய அளவில் புகழ் பெற்ற இயல், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கும் பொருட்டு முறையே **“பாரதியார்", “எம்.எஸ்.சுப்புலட்சுமி", “பாலசரஸ்வதி”** ஆகியோர் பெயரில் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புடைய மூன்று உயரிய விருதுகள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

1.47 தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற வளாகத்தில் நீருற்றுடன் கூடிய தோட்டம் அமைத்தல் மற்றும் திறந்த வெளி கலையரங்கினை மேம்படுத்தும் பணிகள் ஆகியவை ரூ.5.00 இலட்சம் செலவில் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு

**1.48** பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் படைப்புகளாக விளங்கும் ஓவியம், சிற்பம் மற்றும் பதிப்போவியம் ஆகிய கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும், அக்கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு **1975** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அந்நோக்கத்திற்காக முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு கலை பண்பாட்டுத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## கலைச்செம்மல் விருது வழங்கும் திட்டம்

**1.49** புகழ்பெற்ற ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்து வரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் மரபுவழி, புதுப்பாணி கலைப்பிரிவுகளில் **கலைச்செம்மல் விருதுகள்** வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பாராட்டுச் சான்றிதழுடன் ரூ.**20,000/–** பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது. இதுவரை மரபு வழிப் பிரிவில் **11** ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் **42** ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாநில அளவில் ஓவிய–சிற்ப மரபு வழிக் கலை / நவீனபாணிக் கலைக் கண்காட்சி நடத்துதல் மற்றும் விருது வழங்கும் திட்டம்

**1.50** மாநில அளவில் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் மூலம் (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) ஓவிய–சிற்பக் கலைக்காட்சி நடத்திட, தமிழகம் முழுவதும் இருந்து ஓவியங்கள் / சிற்பங்கள் / கலை படைப்புகள் பெறப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் / சிற்பங்கள் / கலை படைப்புகள் கண்காட்சியாக வைக்கப்பட்டும், மரபுவழி / நவீனபாணி ஓவிய சிற்பக் கலைஞர்களின் சிறந்த படைப்புகளுக்கு விருதுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது. சிறந்த படைப்புகளுக்காக இவ்விருதுகள் 30 வயதுக்கு மேற்பட்ட 20 மூத்த (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) கலைஞர்களுக்கு ரூ.9,000/– வீதமும், 30 வயதுக்குட்பட்ட 20 இளங்கலைஞர்களுக்கு (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) ரூ.3500/– வீதமும் என கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

## ஒவ்வொரு கலைஞரும் தனியாக கலைக்காட்சி (One man Show) நடத்த அல்லது கலைஞர்கள் குழுவாக சேர்ந்து கலைக்காட்சி (Group Show) நடத்த நிதியுதவி வழங்கும் திட்டம்

**1.51** தமிழகத்தில் திறமைவாய்ந்த, தகுதியுள்ள ஓவிய சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக அவரவர்கள் கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகளை நடத்திட ஒவ்வொரு கலைஞரும் தனியாக நடத்தும் கலைக்காட்சிக்கு (One man Show) ரூ. 7,500/– வீதமும், கலைஞர்கள் குழுவாக சேர்ந்து நடத்தும் கலைக்காட்சிக்கு (Group Show) ரூ.15,000/– வீதமும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

## இளங்கலைஞர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்

**1.52** சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவ / மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ / மாணவிகளுக்கு ரூ.5,000/– வீதமும், இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ / மாணவிகளுக்கு ரூ.3,000/– வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு

வருகின்றன. இதுவரை 568 இளங்கலை மாணவ / மாணவிகளுக்கும், 78 முதுகலை மாணவ / மாணவிகளுக்கும் படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாவட்டங்களில் கலைக் கூடங்கள்

**1.53** ஓவிய, சிற்பக் கலைஞர்களின் படைப்புகள் கொண்ட மூன்று கலைக்கூடங்கள் உதகமண்டலம், மதுரை மற்றும் சென்னையில் அரசு கவின் கலைக் கல்லூரியிலும் செயல்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

**1.54** ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்குக் பொதுக்கல்வியுடன் கலைக்கல்வி வழங்குவதை அடிப்படை பணியாகக் கொண்டு, கலைகளில் பயிற்சிகள் அளித்தல், அக்கலைகளை பயிற்றுவித்து அவர்களின் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்புகள் வழங்குதல், சிறார்களின் தனித்திறமையை கண்டுணரச் செய்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் 1979–ஆம் ஆண்டு

சென்னையில் தொடங்கப்பட்டு, தற்போது மாநிலம் முழுவதும் 40 இடங்களில் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்கள், ஊரக மையங்கள் என செயல்பட்டு வருகிறது.

## மாவட்ட ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள்

**1.55** சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோயில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருட்டிணகிரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 24 மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்

**1.56** பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை (டாக்டர் எம்.ஜி.ஆர் காது கேளாதோர் பள்ளி, இராமாபுரம்), மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் 10 ஜவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள்

**1.57** புதுக்கோட்டை மாவட்டம் பொன்புதுப்பட்டி, மதுரை எல்லிசு நகர் ஆகிய இரண்டு இடங்களில் ஜவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் செயல்படுகின்றன.

## சென்னையில் செயல்படும் ஐந்து மையங்கள்

**1.58** சென்னையில், மயிலாப்பூர், வியாசர்பாடி, வில்லிவாக்கம், சேலையூர், மேற்கு தாம்பரம் ஆகிய இடங்களில் ஐந்து ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர பயிற்சிகள்

**1.59** ஜவகர் சிறுவர் மன்றங்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, குரலிசை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு(பேண்ட்ஸ்), தையல், ஓவியம்–வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய இருபது கலைகளில் பகுதி நேரப் பயிற்சி வழங்கப்படுகிறது. பகுதிநேர பயிற்சி அளிக்கும் விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| சென்னை | 15 கலைகளில் வாரம் 6 நாட்கள் மாலை நேர பயிற்சி |
| மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள் / விரிவாக்க மையங்கள் | நான்கு கலைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் மாலை நேரப் பயிற்சி |
| ஊரக மையங்கள் | இரண்டு கலைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் மாலை நேரப் பயிற்சி |

1.60 சென்னையில் வசிக்கும் சிறார்கள் பயன்பெற்றிட ஏதுவாகவும், சிறுவர் மன்றப் பயிற்சிகளை பரவலாக்கிடவும், ஐந்து சிறுவர் மன்ற மையங்கள் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. ஐந்து மையங்களில் வழங்கப்படும் பயிற்சி விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| மயிலாப்பூர்—சென்னை | 15 கலைகளில் வாரம் 6 நாட்கள் மாலை நேர பயிற்சி |
| கிருஷ்ணமூர்த்தி நகர், வியாசர்பாடி — சென்னை | 5 கலைகளில் வாரத்தில் இரண்டுநாட்களில் (சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்) மாலை நேரப் பயிற்சி |
| சேலையூர், தாம்பரம் — சென்னை | 6 கலைகளில் வாரத்தில் (வெள்ளி, மற்றும் சனிக்கிழமைகளில்) இரண்டு நாட்கள் மாலை நேரப் பயிற்சி |
| வில்லிவாக்கம் — சென்னை | 6 கலைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் (வெள்ளி, மற்றும் சனிக்கிழமைகளில்) மாலை நேரப் பயிற்சி |
| மேற்கு தாம்பரம் — சென்னை | 2 கலைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் (வெள்ளி, மற்றும் சனிக்கிழமைகளில்) மாலை நேரப் பயிற்சி |

## தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்றத்தின் பங்கு

**1.61** புதுதில்லி தேசிய ஜவகர் சிறுவர் மன்றம் புதுதில்லியில் **9.7.2013** முதல் **13.7.2013** வரை நடத்திய தேசிய **2012** ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு தெரிவு முகாமில் தமிழ்நாட்டிலிருந்து, தென்மண்டல போட்டியில் தெரிவு பெற்ற **27** சிறார்கள் கலந்து கொண்டனர்.

**1.62** புதுதில்லி தேசிய ஜவகர் சிறுவர் மன்றத்தில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு குழந்தைகள் விழா கொண்டாட்டங்கள் **14.11.2013** முதல் **20.11.2013** வரை நடைபெற்றது. இம்முகாமில் தமிழகத்தில் தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் **21** சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து **68** மாணவ / மாணவிகள் கலந்து கொண்டு, தமிழகத்தின் பாரம்பரிய கலை நடனங்களை வெளிப்படுத்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்தனர்.

**1.63** **2013** ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு விருதிற்கு, தென்மண்டல அளவிலான இளந்திரு தெரிவுகள், புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் **28.1.2014** முதல் **31.1.2014**

வரை (இரண்டாம் கட்ட போட்டிகள்) கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடத்தப்பட்டது. இத்தெரிவு முகாமில் தமிழகத்தினை சார்ந்த **68** மாணவ / மாணவிகள் கலந்து கொண்டனர்.

**1.64** புதுதில்லியில் **25.3.2014** முதல் **29.3.2014** வரை நடைபெற்ற இளையோருக்கான தேசிய சுற்றுச் சூழல் மாநாட்டில் தமிழகத்திலிருந்து **30** மாணவ / மாணவிகள் கலந்து கொண்டனர்.

## மாநிலங்களுக்கிடையிலான கலைப்பரிமாற்ற திட்டம்

**1.65** மாநில ஜவகர் சிறுவர் மன்றங்களுக்கிடையேயான கலைபரிமாற்ற திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டு அரசாணை வெளியிடப்பட்டு ரூ.**2.00** இலட்சம் செலவில், குஜராத் மாநிலம், வதோதரா ஜவகர் சிறுவர் மன்றத்தினை சேர்ந்த **10** சிறார்கள் மற்றும் கர்நாடக மாநிலம் பெங்களூரில் செயல்படும் ஜவகர் சிறுவர் மன்றத்தின் **23** சிறார்கள் அடங்கிய கலைக்குழுவால் **24.10.2013** அன்று சென்னை அரசு அருங்காட்சியகக் கலையரங்கிலும், **26.10.2013** அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்திலும், **28.10.2013** அன்று வேலூர் மாவட்டம், ஆற்காடு நகரிலும் சிறார்களின்

கலைநிகழ்ச்சி கலைப்பரிமாற்றத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. இக்கலைப்பரிமாற்ற திட்டத்தில் குஜராத் மாநில சிறார்கள் தங்கள் மாநிலத்தின் சிறப்புகளை விளக்கும் விதமாக தான்டியா, திப்னி, ஆதிவாசி நடனம் போன்ற நடனங்களையும், பெங்களூர் ஜவகர் சிறுவர் மன்ற சிறார்கள் யக்ஷகானா, வீரகேஸ் போன்ற கர்நாடக கிராமியக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகியவற்றை பொதுமக்கள் ரசிக்கும் விதத்தில் வழங்கினர்.

## மாநில அளவிலான திட்டங்கள்

### கோடைக்கால / குளிர்க்கால முகாம்

1.66 சேலம் மாவட்டம், ஏற்காடு நகரில் 16.5.2013 முதல் 25.5.2013 வரை மாநில அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாமும், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் நகரில் 22.12.2013 முதல் 29.12.2013 வரை குளிர்க்கால கலைப்பயிற்சி முகாமும் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, சிலம்பம், யோகா ஆகிய கலைகளில் 200 மாணவ / மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

## மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம்

**1.67** திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரில், **100** சிறார்களுக்கு **25.9.2013** முதல் **2.10.2013** முடிய சுடுமண் சுதை சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் ஆகிய கலைகளில் மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

## மாவட்ட / மாநில கலைப்போட்டிகள்

**1.68** மாணவ / மாணவிகளின் கலை ஆர்வத்தை ஊக்குவித்திட குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியம் ஆகிய நான்கு வகைக் கலைகளில் **5–8, 9–12, 13–16** வயது பிரிவுகளில் உள்ளவர்களுக்கு, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட அளவில் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாவட்ட போட்டிகளில் முதல்பரிசு பெற்ற **236** மாணவ / மாணவிகளிடையே **8.2.2014** அன்று சென்னையில் மாநில அளவிலான கலைப்போட்டிகள் நடத்தி, போட்டியில் வெற்றி பெற்று, முதல்பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.**10,000/–**வீதமும், இரண்டாவது பரிசு பெற்றவர்களுக்கு

ரொக்கப்பரிசாக ரூ.7,500/—வீதமும், மூன்றாவது பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.5,000/—வீதமும் என மொத்தம் ரூ.1,80,000/—த்திற்கு பரிசுத் தொகைகளும், பதக்கங்களும், சான்றிதழ்களும் 24 மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டன.

## தேசிய இளந்திரு விருது

1.69 2012 ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு விருதினை தமிழகத்தினை சேர்ந்த 8 மாணவ / மாணவிகள் பெற்றுள்ளனர். 2011 ஆம் ஆண்டில் தெரிவு பெற்றுள்ள மூன்று மாணவிகளுக்கும், 2012 ஆம் ஆண்டில் தெரிவு பெற்றுள்ள 8 மாணவ, மாணவிகளுக்கும் என மொத்தம் 11 நபர்களுக்கு விரைவில் மைய அரசால் விருதுகள் வழங்கப்படவுள்ளது. இவ்விருது ரூ.10,000/— மதிப்பிலான பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் உள்ளடக்கியது. மைய அரசிடமிருந்து விருது பெற்றவுடன், 11 மாணவ / மாணவிகளுக்கு தமிழக அரசின் சார்பில் தலா ரூ.10,000/— வழங்கி பாராட்டப்படவுள்ளனர்.

## கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

1.70 2013-2014 ஆம் நிதியாண்டில் அனைத்து மாவட்ட ஜவகர் சிறுவர் மன்ற கலையாசிரியர்களுக்கும், திட்ட அலுவலர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் சென்னையில் **21.2.2014** மற்றும் **22.2.2014** ஆகிய இரண்டு நாட்கள் பல்வேறு துறை வல்லுநர்களைக் கொண்டு, புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து **164** ஜவகர் சிறுவர் மன்ற கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் பங்கு பெற்று பயன்பெற்றனர்.

## 1.71 2013-2014 ஆம் நிதியாண்டில் கலை பண்பாட்டுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய வளர்ச்சித் திட்டங்கள்

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி **110** இன் கீழ் இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் ஏற்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து சட்டமன்றத்தில்

அதற்கான சட்டம் இயற்றப்பட்டு பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கலைமாமணி திருமதி.வீணை ஈ.காயத்ரி அவர்கள் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக நியமனம் செய்யப்பட்டு, பணிபுரிந்து வருகிறார்.

- சென்னை, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியை சேர்ந்த 505 பட்டப்படிப்பு மாணவ / மாணவிகளுக்கும், மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் பட்டப்படிப்பு பயிலும் 65 மாணவ / மாணவிகளுக்கும் விலையில்லா மடிக்கணினிகள் ரூ.101 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் பட்டப்படிப்பு பயிலும் 25 மாணவ / மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் ரூ.5.07 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.
- சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக்

கல்லூரிகளில் பயிலும் **831** மாணவ / மாணவிகளுக்கு கட்டணமில்லாத பேருந்து பயண அட்டை வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டு **ரூ.10.81** இலட்சம் செலவில் கட்டணமில்லாத பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது.

- கலை பண்பாட்டுத்துறையின் மூலம், நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்திட கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக **ரூ.1** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, **ரூ.66.74** இலட்சத்தில் பல்வேறு கலைவிழாக்கள் நடத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் இசைக் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக கௌரவ பேராசிரியர்கள் **ரூ.12.00** இலட்சம் செலவில் நியமனம் செய்யப்பட்டு, மாணவர்களுக்கு திறன்வாய்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது.

- கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏழு அரசுக் கல்லூரிகளில் சுகாதார வசதிகள், உணவுக் கூடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள்

ரூ.1 கோடி செலவில் கட்டித் தர ஆணையிடப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நவீன அனிமேஷன் தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் கணினிக்கூடங்களும், மூன்று அரசு இசைக் கல்லூரிகளில் கணினிக் கூடங்கள் ரூ.50.00 இலட்சம் செலவில் ஏற்படுத்த, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 7 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்கு ஒரு கல்லூரிக்கு ரூ.12 இலட்சம் வீதம், ‘‘டெம்போ டிராவலர்’’ வாகனங்கள் ரூ.84.00 இலட்சம் செலவில் வாங்க ஆணையிடப்பட்டு, 7 டெம்போ டிராவலர் வாகனங்கள் ரூ.72.84 இலட்சத்தில் வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- திருநெல்வேலியில், மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டலக் கலை பண்பாட்டு வளாகம் கட்டப்பெற ரூ.99.90 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கட்டடப்பணிகள் நிறைவு பெற்று விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

- திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் முதல் தளம் கட்டப்பெற ரூ.61.60 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, குடில்கள், வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளது.
- சேலத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மாவட்ட சவகர் சிறுவர் மன்றம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் உள்ளடக்கிய ‘‘மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்’’ ரூ.1.00 கோடி செலவில் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு, நிறைவு பெறும் நிலையில் உள்ளது.
- கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு மலுமிச்சம்பட்டி கிராமத்தில் கட்டடம் கட்ட, தரைதளத்திற்கு ரூ.90.91 இலட்சம் நிதி ஒப்பளிப்பும், முதல்தளம் கட்டப்பெற ரூ.98.80 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டு, கட்டடப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சென்னை, அருங்காட்சியத்தில், அருங்காட்சியகங்கள் துறை மற்றும் கலை பண்பாட்டுத் துறை இணைந்து நமது பாரம்பரியமிக்க தமிழக கலைகளை மாணவர்களுக்கு வெளிப்படுத்த

'பண்பாட்டுப் பலகணி' என்ற சிறப்பு கலை நிகழ்ச்சி ரூ.6.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பில் நடத்தப்பட்டன.

- சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் ரூ.75.00 இலட்சம் செலவில் கலைக்கூடம் கட்டவும், ஆவணக் காப்பகம் ரூ.25.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தவும் ஆணையிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கலை விழாக்கள் நடத்தவும், கலைப்பயிற்சி அளித்திடவும், ரூ.9.60 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.
- தமிழ்நாடு பழங்குடியினர் நடனம் மற்றும் இசைவிழா கலை நிகழ்ச்சிகள் 6.8.2013 முதல் 12.8.2013 வரை சென்னையில் 7 நாட்கள் நடத்தப்பட்டன. இதில் கோத்தர் இனமக்களின் கலை நிகழ்ச்சி, மாவடப்பு புலையர் ஆதிவாசி நிகழ்ச்சி, தோடர் இன மக்களின் கலை நிகழ்ச்சி, பாளமேடு கிராம மலையாளி கலை நிகழ்ச்சி, இருளர் இனமக்களின் கலை நிகழ்ச்சி, பணியர் மற்றும் பட்டக் குரும்பர் இன மக்களின் கலை நிகழ்ச்சி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- மாநில கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ் **2013** அக்டோபரில் மூன்று நாட்கள் தமிழகத்தின் பாரம்பரிய கலைகளான கிராமிய கலை நிகழ்ச்சிகள் இராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூர் நகரில் நடைபெற்ற 'ஜவஹர் கலா கேந்திரா ஜெய்ப்பூர்' நடத்திய லோக்ரங்க விழாவில் நடத்தப்பட்டன.

- தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் மாநிலங்களுக்கிடையே கலை பரிமாற்ற திட்டத்தின் கீழ், குஜராத் மாநிலம் வதோதரா சவகர் சிறுவர் மன்றம், கர்நாடக மாநிலம் பெங்களூர் சவகர் சிறுவர் மன்றத்தை சேர்ந்த **33** மாணவர்கள் கலந்து கொண்ட கலைப்பரிமாற்ற கலை நிகழ்ச்சிகள் சென்னை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது

- தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அளித்திட அரசாணை வெளியிடப்பட்டதின் அடிப்படையில், **21.2.2014** மற்றும் **22.2.2014** ஆகிய இரண்டு நாட்கள் சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பட்டது.

இதில் **168** கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் பங்கு கொண்டு பயன் பெற்றனர்.

- தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம் கலைஞர்கள் முகாம் (ஓவியம் / சிற்பம்) சென்னை, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.**3.00** இலட்சம் செலவில் ஓவியர்கள் முகாம் நடத்தப்பட்டது.

## 1.72 2013–2014 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் துறையால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் விவரம் :–

| வ. எண் | திட்டம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் (மாவட்டத்திற்கு ரூ.30,000/–வீதம்) | 9.60 |
| 2 | கலை பண்பாட்டு இயக்ககத்தின் பண்பாட்டு பலகணி கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் | 6.00 |
| 3 | தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் மாநிலங்களுக்கிடையே கலைபரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்துதல் | 3.00 |
| 4 | தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு தேசிய சிறுவர் மன்ற வல்லுநர்களை கொண்டு புத்தாக்கப் பயிற்சி அளித்தல் | 3.00 |

| | | |
|---|---|---|
| 5 | மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் மூலம் ஓவியர்கள் முகாம் (ஓவியம் /சிற்பம்) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்துதல் (ரூ.50,000/–வீதம் நடத்துதல்) | 3.00 |
| 6 | சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் கலைக்கூடம் கட்டப்பெறுதல் | 75.00 |
| 7 | சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் ஆவணக் காப்பக கூடம் நவீனப்படுத்துதல் | 25.00 |
| | **மொத்தம்** | 124.60 |

## புதிய திட்டங்கள்

## 1.73 2014–2015 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் துறையில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களின் விவரம்:–

| **வ. எண்** | **திட்ட விவரம்** | **தொகை (ரூபாய் இலட்சத் தில்)** |
|---|---|---|
| 1 | கலை பண்பாட்டு இயக்கக அலுவலகத்திற்கு கணினி உபகரணங்கள் வாங்குதல் | 2.00 |
| 2 | சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரிகளுக்கு இசைக்கருவிகள் வாங்குதல் மற்றும் பழுது பார்த்தல் (6+3+3+3) | 15.00 |
| 3 | சென்னை அரசு இசைக்கல்லூரியில் முட்புதர்கள் அகற்றிட புல்வெட்டும் இயந்திரம் மற்றும் தோட்ட கருவிகள் வாங்குதல் | 1.00 |

| | | |
|---|---|---|
| 4 | சென்னை அரசு இசைக்கல்லூரியில் வகுப்பறைகளில் கரும்பலகைகள் அமைத்தல் | 1.00 |
| 5 | மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு கணினியில் AutoCad பயிற்சி அளித்தல் | 1.00 |
| 6 | சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்கு வரைபடத் தாங்கிகள், சிற்பம் செய்வதற்கான அடிப்படை பலகைகள், களிமண் சிற்பங்கள் நிறுவ தேவையான நிறுத்திகள் வாங்குதல் (கும்பகோணம் ரூ.4 இலட்சம் + சென்னை ரூ.2 இலட்சம்) | 6.00 |
| 7 | சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியின் துகிலியல் துறை பிரிவிற்கு தளவாடங்கள் வாங்குதல் (டைலரிங் மெஷின் உள்ளிட்டவை) | 1.00 |
| 8 | சவகர் சிறுவர் மன்றங்களில் பயிற்சி பெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு பயிற்சிப் பொருட்கள் வாங்குதல் | 2.00 |
| 9 | தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழுவின் மூலம் ஓவியர்கள் முகாம் (ஓவியம் / சிற்பம்) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்துதல் | 2.00 |
| 10 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலையரங்கத்திற்கு குளிரூட்டும் வசதி செய்தல் | 4.00 |
| 11 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் திறந்த வெளி கலையரங்கத்திற்கு ஒலி–ஒளி அமைப்பு வசதிகள் செய்தல் | 3.00 |
| 12 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் மூலம் இளைய தலைமுறையினருக்கு நாட்டுப்புறக் கலைப்பயிற்சி அளித்தல் | 4.00 |

| | | |
|---|---|---|
| 13 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இலவச இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்குதல் | 3.00 |
| 14 | சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதிய பொலிரோ சீருந்து வாங்குதல் | 6.25 |
| 15 | மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி வளாகத்தில் கலை அரங்கம் கட்டுதல் | 7.75 |
| 16 | சென்னை அரசு இசைக்கல்லூரியில் அலுவலகப் பயன்பாட்டிற்கு கணினி உபகரணங்கள் வாங்குதல் | 1.00 |
| 17 | சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் வண்ணக்கலைப் பிரிவில் நவீன பயிற்சி முறையினை செயல்படுத்துதல் | 15.00 |
| 18 | சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளில் வயலின் இசைக்கருவியில் நவீன கற்பிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல் | 10.00 |
| 19 | சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளில் கீ–போர்டு இசைக்கருவியில் நவீன கற்பிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல் | 10.00 |
| 20 | சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் புதிய டிஜிட்டல் பதிவு அரங்கு நிறுவுதல் | 13.00 |
| 21 | சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் ஒளி–ஒலி நூலகம் அமைத்தல் | 2.00 |
| | **மொத்தம்** | 110.00 |

## முடிவுரை:

மனித இனத்தின் மாண்பினை பிரதிபலிக்கும் கண்ணாடியாக கலையும் பண்பாடும் திகழ்கின்றது. தொன்மையான கலை வடிவங்களையும், தமிழ் பண்பாட்டினையும், கலை வடிவங்களை பேணி பாதுகாப்பது, அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்துதல், அழிந்து வரும் கலைகளை ஆவணமாக்கி எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லுதல் என்பதை இலக்காக்கி கலை பண்பாட்டுத்துறை செயல்பட்டு வருகிறது. மேற்காணும் இலக்கினை அடைய துறையின் வாயிலாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதில் கணிசமான அளவு வெற்றியும் பெற்று வருகிறது.

# அருங்காட்சியகங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

## 2. அறிமுகம்:

அருங்காட்சியகம் என்பது அறிவியல், கலை, பண்பாடு அல்லது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரும்பொருள்களை சேகரித்து பாதுகாத்து பலவகையான தற்காலிக அல்லது நிரந்தரக் கண்காட்சிகள் வாயிலாகப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கக் கூடிய ஒரு நிறுவனம் ஆகும். அவை முறைசாராக் கல்வியினை வரலாறு மற்றும் அறிவியல் தொடர்பான சேகரிப்புகள் வாயிலாக பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்குகின்றன. விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் அறிவினை பரவலாக்குதல் ஆகியவை அருங்காட்சியகங்களின் இன்றைய முக்கிய நோக்கமாக உள்ளன. ‘இயங்கும் மாதிரிகள்’ பார்வையாளர்களின் பங்கேற்பினைத் தூண்டுகின்றன. இந்தவகையில் அருங்காட்சியகங்கள் மாணவர்களுக்காக ஒரு துணைக் கல்வி நிறுவனங்களாகச் செயல்படுகின்றன. பொழுதுபோக்கு வழியிலான கல்வி மற்றும் பொழுதுபோக்கு வழியே தகவல் பரப்புதல் ஆகியன அருங்காட்சியகங்களின் மையக் கருவாக

உள்ளன. பல்வேறு வகையான தேவை மற்றும் விருப்பம் கொண்ட பார்வையாளர்களுக்குத் தேவையானவற்றை அருங்காட்சியகங்கள் வழங்க வேண்டும். அருங்காட்சியகங்களின் சேவை என்பது ஒருமுறை வரும் பார்வையாளரை மீண்டும் பார்வையிட ஈர்க்கும் வகையில் இழுத்தல் வேண்டும். அருங்காட்சியகங்கள் என்பது பொதுமக்களையும் மாணவர்களையும் ஈர்க்கும் வகையில், விளக்கப் பலகைகள், வழிகாட்டி நூல்கள் மற்றும் கேட்டொலி வழிகாட்டிக் கருவிகள் வசதிகளுடன் அருங்காட்சியகங்கள் விளங்க வேண்டும். அருங்காட்சியகங்கள் துறை மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்காக பொழுதுபோக்கினை வழங்குகின்றபோது கல்வியினையும் இணைந்து வழங்கக் கடினமாக உழைத்து வருகிறது.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

**2.1** சென்னை அரசு அருங்காட்சியகம் இந்தியாவில் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாகும். இது கி.பி.**1851–**இல் தொடங்கப்பட்டது. கலை, தொல்லியல், மானிடவியல், நாணயவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், சிறுவர் அருங்காட்சியகம் போன்ற பல்வேறு

பிரிவுகளை உள்ளடக்கிய **45** காட்சிக்கூடங்களை, ஐந்து தனித்தனி கட்டடங்களில் அமையப் பெற்று நகரத்தின் மையத்தில் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. வேதியப் பாதுகாப்பு பிரிவினைத் தவிர கல்வி, வடிவமைப்பு மற்றும் காட்சியமைப்பு பிரிவுகள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உள்ளன. உலகப் புகழ் பெற்ற செப்புப் படிமங்கள், இராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகள், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகள் , இந்திய நாணயங்கள், நீலத் திமிங்கலத்தின் எலும்புக் கூடு, ரவிவர்மா ஓவியங்கள், அமராவதி (சுண்ணாம்புப் பாறை) சிற்பங்கள், ஆகியன சென்னை அரசு அருங்காட்சியகத்தின் சில குறிப்பிடத்தக்க சேகரிப்புகளாகும். சென்னைஅரசு அருங்காட்சியகத்தில் சிறுவர் அருங்காட்சியக காட்சிக்கூடம் மற்றும் புவியியல் காட்சிக்கூடங்களில் ‘இயங்கும் காட்சியமைப்புகள்’ அமைக்கப்பட்டுள்ளன.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

**2.2** சென்னையில் இருக்கும் தலைமை அருங்காட்சியகத்தினைத் தவிர புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி,

திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய **20** இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், புதுக்கோட்டை மாவட்ட அருங்காட்சியகம் முன்பிருந்த சமஸ்த்தான காலத்திலிருந்தே செயல்பட்டு வருகின்றது.

**பகுதி II திட்டங்கள் 2013–2014**

2.3 **2013–2014**–ஆம் ஆண்டு பகுதி II திட்டங்களின் கீழ் பின்வரும் குறிப்பிடத்தக்க பணிகள் நிறைவடைந்துள்ளன:–

1. அருங்காட்சியகப் பாதுகாப்பு தொடர்பாக, பாதுகாப்பு சாதனங்களை மேம்படுத்தும் முகமாக, முதல்முறையாக அகச் சிவப்புக் கதிர்கள் மூலம் செயல்படும் காமிரா சாதனங்கள், வளாகத்தில் ரூ.**15** இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.
2. நவீன, பார்வையாளர் வசதிக்கு ஏதுவாக ஈர்க்கும் வகையிலான வழிகாட்டி பலகைகள் மற்றும் தகவல்கள் நிறைந்த வழிகாட்டிப் பலகைகள் பார்வையாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.**6.50** இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

3. சென்னை, அரசு அருங்காட்சியகம் இந்தியாவில் உள்ள முக்கியமான அருங்காட்சியகங்களில் ஒன்றாக விளங்கி வருவதினால் பேரோளர்களின் வருகையின்போது விவாதிக்க எதுவாக ரூ.**4** இலட்சம் செலவில் கூட்ட அரங்கின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
4. பறவைகள் காட்சிக்கூடத்தில் பறவைகள் பற்றிய பொருண்மைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கும் விதமாக ரூ.**2.64** இலட்சம் செலவில் **360** டிகிரி கோணத்தில் ஒளிவில்லை காட்சியமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.
5. மதுரை மாவட்ட அருங்காட்சியகத்தில் ரூ.**5** இலட்சம் செலவில் ஒரு கூடம் புத்தாக்கம் செய்யப்பட்டு ஒன்றில் இரண்டையும் செய்யக்கூடிய காட்சியமைப்பு மற்றும் கல்வி குறித்த நிகழ்ச்சிகளுக்காக பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.

**பகுதி II திட்டங்கள் 2014–2015**

**2.4 2014–2015–**ஆம் ஆண்டு பகுதி II திட்டங்களின் கீழ் பின்வரும் புதிய யுக்தியுடன்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–

1. மாவட்ட அருங்காட்சியகத்தில் இயந்திர இயங்கு மாதிரி டைனோசர் ரூ.18 இலட்சம் செலவில் அமைத்தல்.
2. சென்னை, அரசு அருங்காட்சியகப் புவியியல் காட்சிக் கூடத்தில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பறக்கும் ஊர்வன இயங்குமாதிரியினை ரூ.7 இலட்சம் செலவில் அமைத்தல்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்**

**2.5** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் **110** விதியின் கீழான அறிவிப்பின்படி தேசிய கலைக் கூடத்தினைப் புதுப்பிக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. வல்லுநர் குழு தேசிய கலைக் கூட கட்டடத்தினை ஆய்வு செய்தது. அக்குழு **18.11.2013** அன்று கூடிய கூட்டக் குறிப்பில் தனது ஆய்வுக் குறிப்பினை வழங்கியது. அந்த கூட்டக் குறிப்பின்

படியும் வல்லுநர் குழுவின் அறிவுரையின்படி ஓய்வு பெற்ற தொல்லியல் கண்காணிப்பாளரான (இந்தியதொல்பொருள் ஆய்வுத் துறை) திரு.கே.டி. நரசிம்மன் அவர்கள் ஓர் ஆய்வறிக்கையை வழங்கியுள்ளார். அந்த ஆய்வறிக்கையின்படி பொதுப்பணித் துறையினர் தேசிய கலைக் கூடத்தினை புதுப்பிப்பதற்கு மதிப்பீட்டினை தயாரித்து வல்லுநர் குழுவால் தனது 23.05.2014–ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் ஒத்திசைவு அளிக்கப்பட்டுள்ளது. இந்த பணி தொடங்கப்பட்டது.

**2012–2013–இல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பு**

**2.6** அரியலூரில் புதையுயிரிப் படிவ அருங்காட்சியகம் அமைப்பது தொடர்பாக, அருங்காட்சியகம் அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு கட்டடம் கட்டுவதற்கான முப்பரிமாண ஆட்டோகேட் வரைபடம் ஒன்று பொதுப்பணித் துறையின் மூலம் தயாரிக்கப்பட்டது.

**2.7 சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நிகழ்த்தப் பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த கல்விப் பணிகள்:**

1. பன்னாட்டு அருங்காட்சியக தினத்தினை யொட்டி 2013, மே 18 அன்று ‘சிவ வடிவங்கள்’ என்ற தலைப்பில் கண்காட்சி நடத்தப்பட்டது.
2. இந்திய முந்து வரலாற்றின் 150–ஆவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி சென்னை ஷர்மா பாரம்பரிய கல்வி மையத்துடன் இணைந்து ‘ராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகள்’ பற்றிய கண்காட்சி நடத்தப்பட்டது.
3. ‘அரும்பொருட்கள் பாதுகாப்பு’ குறித்த ‘39–ஆவது புத்தொளிப் பயிற்சி’ சென்னை அரசு அருங்காட்சியக வேதியப் பாதுகாப்பு கூடத்தில் வழங்கப்பட்டது.
4. திரு க. இலக்குமிநாராயணன் அறக்கட்டளை சொற்பொழிவுகள் அருங்காட்சியகத்தில் தொடங்கப்பட்டது. இலக்குமிநாராயணன் அறக்கட்டளைச் சொற்பொழிவில் முதல் சொற்பொழிவு முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., கூடுதல் தலைமை செயலாளர் அவர்களால்

"திருப்புடைமருதூர் சுவர் ஓவியங்கள்" என்ற தலைப்பில் வழங்கப்பட்டது.

**அகில உலக அருங்காட்சியக தினம் – 2014**

**2.8** அகில உலக அருங்காட்சியக தினம் ஒவ்வொரு வருடமும் மே **18**ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. சென்னை அருங்காட்சியகத்தில் அகில உலக அருங்காட்சியக தினத்தை கொண்டாடுவதற்காக ‘‘தென்னிந்திய புத்த சிற்பங்கள்’’ என்ற தலைப்பில் கண்காட்சி ஒன்று **18.05.2014** முதல் **21.05.2014** வரை நூற்றாண்டு கண்காட்சி கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து சமீப காலமாக பல்வேறு புத்த சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் நாகப்பட்டினத்தில் கண்டெடுக்கப் பட்ட புத்த படிமங்கள் உள்ளன. அமராவதி மற்றும் நாகர்ஜுனகொண்டா, ஆந்திர மாநிலத்தில் உள்ள முக்கிய புத்த மத தொடர்புடைய இடங்களாகும். இந்த கண்காட்சி தென்னிந்தியாவில் புத்த மதம் காணப்பட்டதற்கான அறிகுறிகளையும் மற்றும் புத்த மத சிற்பங்களின் சிறப்பையும் உணர்த்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியில் புத்த சிற்பங்களின்

அழகிய புகைப்படங்களும் சில புத்த படிமங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியை ஓய்வு பெற்ற மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின், கண்காணிப்பு தொல்லியல் வல்லுனர் திரு. கே.டி.நரசிம்மன் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் அருங்காட்சியக ஆணையர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

**பயிற்சி வகுப்புத் தொடக்க விழா**

**2.9** சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வேதியியப் பாதுகாப்புப் பிரிவு ஒவ்வொரு ஆண்டும் 'அரும்பொருள் பாதுகாப்புப் பயிற்சி'யினை வழங்கி வருகின்றது.

**2.10** இந்த **40**–ஆவது புத்தொளிப் பயிற்சியினை, **03.06.2014** அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் தொல்லியல், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.சி. வீரமணி அவர்கள் சென்னை அருங்காட்சியக நூற்றாண்டு கண்காட்சிக் கட்டடத்தில் தொடங்கி வைத்தார்கள். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும்

அறநிலையங்கள் துறை மற்றும் அருங்காட்சியக ஆணையர் முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இத்திட்டங்களைப் பற்றியும் விவரித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பயிற்சியினைத் தொடங்கி வைத்ததோடு மட்டுமல்லாமல் சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் மற்றும் சென்னை அரசு அருங்காட்சியக முதன்மைக் கட்டடத்தில் (கிராபைட்) ‘திங்கள் காட்சிப் பொருள்’ கண்காட்சியினையும் தொடங்கி வைத்தார்கள்.

**முடிவுரை**

தற்போதைய சூழலில் அருங்காட்சியகங்கள் வழக்கமான ‘அரும்பொருள் சார்ந்த காட்சியமைப்பு’ என்பதிலிருந்து மாற்றமடைந்து ‘கருத்தியல் சார்ந்த காட்சியமைப்பு’ என்ற மாற்றத்தினை அடைந்துள்ளது. மாணவர் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் அருங்காட்சியகங்கள் பலதரப்பட்ட கல்விப் பணிகளை நிகழ்த்துகின்றன. கல்விப் பணிகளுடன் கூடுதலாக அருங்காட்சியகங்கள் பழமையினைப் பாதுகாத்து வரும்

தலைமுறையினருக்கு வழங்கும் பணியினை செய்கின்றன. நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலமாக அருங்காட்சியகங்கள் நவீன விளக்கொளி வசதிகள், வழிகாட்டுப் பலகைகள் மற்றும் தகவல் நிறைந்த விளக்க அட்டைகள் போன்றவற்றால் மாணவர்களுக்கு அறிவினைப் பரவலாக்கம் செய்கின்றன. பொதுமக்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களின் சிந்தனைகளை வடிவமைப்பதில் அருங்காட்சியகங்கள் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன.

# தொல்லியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014 – 2015

## 3. முன்னுரை

தொல்லியல் என்பது பல்நோக்கு அறிவியல் ஆகும். இது களாய்வு மற்றும் அகழாய்வில் கண்டெடுக்கப்படுகின்ற நம்பத்தக்க சான்றுகளைக் கொண்டு ஒரு மண்டலத்தின் தொன்மையை வெளிப்படுத்துகிறது. தொல்லியல் சான்றுகள் ஒரு குறிப்பிட்ட மண்டலத்தின் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது. அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட புதைந்துபோன விலைமதிப்பற்ற அரிய தொல்பொருட்கள் பழங்காலத்தில் பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளுக்கிடையே நடைபெற்ற கடல்சார் வாணிபம் மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளை வெளிப்படுத்துகிறது. புதைந்து போன தொல் பொருட்கள் பழங்கால மக்களின் வாழ்க்கை மற்றும் சமூக பொருளாதார நிலைகளை வெளிப்படுத்துவதன் மூலம் நமக்கு கடந்த காலத்தை அறிந்து கொள்ள உதவுகிறது.

**தொல்லியல் துறை**

**3.1** தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்து தொன்மை மாறாமல் பாதுகாப்பதையும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுப் பணி செய்வதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை **1961** ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. பின்னர், கல்வெட்டுகளை படியெடுத்தல், அவற்றை புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிடுதல், தொல்லியல் அகழ்வைப்பகங்களை அமைத்தல், கலைப் பொருட்களை பாதுகாத்தல், நிழற்படப் பிரிவு மற்றும் பழம்பொருட்கள் பதிவு செய்தல் போன்ற செயல்பாடுகள் வாயிலாக இத்துறை விரிவுபடுத்தப்பட்டது. மேலும், சென்னை தலைமையிடத்தில் பணியாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படும் வகையில் மதிப்புமிக்க, தனித்தன்மை வாய்ந்த, அரிய புத்தகங்களுடன் கூடிய ஓர்ஆய்வு நூலகம் இயங்கி வருகிறது. இத்துறையின் தொழில்நுட்ப செயல்பாடுகளுக்கு ஏற்றுவாறு உரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**3.2** தொல்லியல் துறை இயக்குநரின் மேற்பார்வையில் துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், உதவி செயற்பொறியாளர், உதவி இயக்குநர் (மண்டலம்), காப்பாட்சியர், கல்வெட்டாய்வாளர், தொல்லியல் அலுவலர், அகழாய்வாளர், வரலாற்றுக்கு முந்தைய கால அகழாய்வாளர் உதவியுடன் தொல்லியல் துறை இயங்கி வருகிறது.

**பாதுகாப்பு**

**3.3** சமயம் சார்ந்த மற்றும் சமயம்சாரா **88** புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக தமிழக அரசால், பழங்கால வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் பரப்பிடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம், **1966**–ன்கீழ் இதுவரை அறிவிக்கப்பட்டுள்ளன.

**3.4 2013–2014** ஆம் ஆண்டில் தமிழ்நாடு புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் பரப்பிடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம், **1966**–ன்கீழ் மூன்று புதிய சின்னங்கள் இத்துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சின்னங்கள் பின்வருமாறு :–

1) ‘பிராமி கல்வெட்டுகள்’, ஜம்பை கிராமம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்

***அரசாணை (நிலை) எண். 195, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 02.08.2013.***

2) ‘வழிப்போக்கர் மண்டபம்’ பாப்பனம் கிராமம், காரியாபட்டி வட்டம், விருதுநகர் மாவட்டம்

***அரசாணை (நிலை) எண். 54, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 29.04.2014.***

3) ‘அருள்மிகு நாகநாதசுவாமி கோயில்’, மானம்பாடி கிராமம், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

***அரசாணை (நிலை) எண். 58, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 15.05.2014.***

**3.5** **13**வது நிதிக் குழு **(2011–2014)** மானியத்தின் பரிந்துரையின்படி, மாநில சிறப்புத் தேவை திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள **30** கோயில் புராதன சின்னங்களை பாதுகாக்கவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை

ஏற்படுத்தவும் ரூ. **970.70** இலட்சம் (ரூபாய் தொள்ளாயிரத்து எழுபது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) **2011–2014**ஆம் நிதியாண்டிற்கு கீழ்கண்டவாறு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது:–

**ஆண்டு வாரியான ஒதுக்கீட்டு விவரங்கள்**

| வருட வாரியாக விவரம் | பாதுகாப்பு பணி | | உள்கட்டமைப்பு பணி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | மொத்த சின்னங்களின் எண்ணிக்கை | ரூபாய் இலட்சத்தில் | மொத்த சின்னங்களின் எண்ணிக்கை | ரூபாய் இலட்சத்தில் | ரூபாய் இலட்சத்தில் |
| 2011–2012 | 5 | 18.35 | – | – | 18.35 |
| 2012–2013 | 16 | 301.90 | 13 | 293.00 | 594.90 |
| 2013–2014 | 9 | 245.45 | 7 | 112.00 | 357.45 |
| **மொத்தம்** | **30** | **565.70** | **20** | **405.00** | **970.70** |

**3.6** **13**வது நிதிக் குழு மானியத்தின் கீழ் **30** கோயில் புராதன சின்னங்களின் பாதுகாப்புப் பணிகளுக்கு ரூ.**565.70** இலட்சமும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.**405.00** இலட்சமும் மொத்தமாக ரூ.**970.70** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. **2013–14**ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும்

ஒன்பது சின்னங்களில் பாதுகாப்புப் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2013 – 2014

| வ. எண் | பணிகள் குறித்த விவரம் | தொகை ரூபாய் இலட்சத் தில் |
|---|---|---|
| 1 | சிவன் கோயில், சிவபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் | 22.50 |
| 2 | பூண்டி அருகர் கோயில், இரும்பேடு, திருவண்ணாமலை மாவட்டம் | 58.06 |
| 3 | கங்கைகொண்டசோழீஸ்வரர் கோயில், கூழம்பந்தல், திருவண்ணாமலை மாவட்டம் | 68.50 |
| 4 | திருமூலநாதர் கோயில், பேரங்கியூர், விழுப்புரம் மாவட்டம் | 31.20 |
| 5 | இரட்டை கோயில், கீழையூர், அரியலூர் மாவட்டம் | 51.30 |
| 6 | அகஸ்தீஸ்வரர் கோயில், பெருங்குடி, திருச்சி மாவட்டம். | 19.59 |
| 7 | சிவன் கோயில், ஆலம்பாக்கம், திருச்சி மாவட்டம் | 42.00 |
| 8 | திருமலை நாயக்கர் மண்டபம், வலையபட்டி (அழகர் கோயில்), மதுரை மாவட்டம். | 34.50 |
| 9 | சிவன் கோயில், அய்யாபட்டி (தர்காகுடி), மதுரை மாவட்டம் | 29.80 |
| | **மொத்தம்** | **357.45** |

**வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு**

**3.7** இத்துறையால் **37** இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டதில் **35** இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகள் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. **2011–2012** ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், ஆலம்பரை கோட்டை என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் ரூ.**2.50** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் பீரங்கி குண்டுகள், செம்பு கசடுகள், பானை ஓடுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், இத்தொல்பொருட்களைக் கொண்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக கண்காட்சியும் நடத்தப்பட்டது. **திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் பகுதியில் 2013–2014** ஆம் ஆண்டு அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வின் மூலம் மண்ணில் புதையுண்டிருந்த அழகிய யானைப் புடைப்பு சிற்பம் மற்றும் மனித உருவங்கள் அடங்கிய சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இதில் ஒரு சிற்பம், ஒரு மனித உருவம் யானைக்கு முன்புறத்தில் நின்ற நிலையில் யானையினுடைய துதிக்கையை பிடித்தவாறும், மற்றொரு மனித உருவம் யானையினுடைய பின்புறத்தை அங்குசம்

போன்ற ஆயுதத்தைக் கொண்டு யானையை தள்ளுவது போன்று அமைந்துள்ளது. இப்புடைப்பு சிற்பங்கள் மண்டபத்தின் அதிஷ்டானப் பகுதியின் ஓர் அங்கமாக காணப்படுகிறது. இவ் அகழாய்வு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ் அகழாய்வின் போது வெளிக் கொணரப்பட்ட கி.பி. 13ஆம் – 14ஆம் நூற்றாண்டை சார்ந்த ஆயிரம் கால் மண்டபத்தை சார்ந்த பழங்கால நிலைப் பகுதியானதால் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

**3.8** திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் திருவிதாங்கூர் ஸமஸ்தான இலச்சினை மற்றும் கல்வெட்டுடன் கூடிய யாத்திரிகர்கள் ஓய்வுக்காக தங்களது பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்குரிய ஒரு சுமைதாங்கி (கல் மேடை) அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல் மேடை குற்றாலம் அகழ்வைப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தொல்லியல் அகழ்வைப்பகங்கள்**

**3.9** அகழாய்வுகளின்போது கிடைக்கும் மதிப்புமிக்க தொல்பொருட்கள் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இத்துறையின் கீழ்

செயல்படும் பின்வரும் 14 தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன:–

| வ.எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 2) | ஆழ்கடல் அகழ்வைப்பகம் | பூம்புகார், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 3) | கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம் | கங்கைகொண்ட சோழபுரம், அரியலூர் மாவட்டம் |
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு , வேலூர் மாவட்டம் |
| 6) | வரலாற்று முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை, மதுரை மாவட்டம் |
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம் |
| 9) | மராட்டா அகழ்வைப்பகம் | தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர், கரூர் மாவட்டம் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 12) | **குற்றாலம் அகழ்வைப்பகம்** | **குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்** |
| 13) | **திருக்கோயிலூர் அகழ்வைப்பகம்** | **திருக்கோயிலூர், விழுப்புரம் மாவட்டம்** |
| 14) | **தருமபுரி அகழ்வைப்பகம்** | **தருமபுரி , தருமபுரி மாவட்டம்** |

**கல்வெட்டியல்**

**3.10** தொல்லியல் துறை கல்வெட்டுகளைப் படியெடுத்து படித்து தவறில்லாது சரிபார்த்து, பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகின்றது. இதுவரை மொத்தமுள்ள **32** மாவட்டங்களில் **27** மாவட்டங்களில் **24,160** கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. தற்போது இச்செயல்திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. இதுவரை **14,337** கல்வெட்டுகள் இத்துறை கல்வெட்டாய்வாளர்களால் படிக்கப்பட்டுள்ளன. இதில் **6,426** கல்வெட்டுகள் **44** தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

3.11 சென்னை தலைமை அலுவலகத்தில் **1974**ஆம் ஆண்டு முதல் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் முதுகலைப்பட்டம் பெற்ற **8** மாணவர்களுக்கு "கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்" எனும் பிரிவில் ஓராண்டு முதுகலைப் பட்டய வகுப்பு நடத்தப்படுகிறது. இம்மாணவர்களுக்கு பயிற்சி

உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.2,000/– வழங்கப்படுகிறது. இதுவரை 213 மாணவர்களுக்கு முதுநிலை பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

**வெளியீடுகள்**

3.12 கல்வெட்டுகள், வரலாற்றுச் சின்னங்கள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்டத் தொல்லியல் கையேடுகள், தொல்லியல் சின்னங்கள் குறித்த கையேடுகள், அகழ்வைப்பகங்கள் குறித்த புத்தகங்கள், கோயில் ஆய்வேடுகள் ஆகியவை தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடும் பொருட்டு இத்துறைக்கென தனியே ஒரு அச்சகம் இயங்கி வருகிறது. இதுவரை 267 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2013–2014 ஆம் நிதியாண்டில் 8 மறுபதிப்பு நூல்கள் மற்றும் 6 புதிய வெளியீடுகள் (மொத்தம் 14 நூல்கள்) வெளியிடப்பட்டுள்ளன. ‘கல்வெட்டு’ எனும் காலாண்டு இதழும் வெளியிடப்படுகிறது.

**நிழற்படம்**

3.13 பல்வேறு கோயில்கள், கற்சிலைகள், சுவர் ஓவியங்கள் மற்றும் தொல்பொருட்கள் இத்துறையின் நிழற்படமெடுப்பவர்கள் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், அகழாய்வு நடைபெறுகின்ற போதெல்லாம் அகழாய்வின் பல நிலைகள் மற்றும் அகழாய்வு குழிகளில் கண்டெடுக்கப்படுகின்ற தொல்பொருட்களை முறையாக உரிய நிழற்படங்களுடன் ஆவணப்படுத்தும்

பணியும் மேற்கொள்ளப்படுகிறது. புராதன சின்னங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு பணிகளும் நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்தப்படுகின்றன.

**வேதியியல் பாதுகாப்பு**

**3.14** அகழாய்வின் போது கிடைக்க பெறுகின்ற தொல்பொருட்களை அவற்றை அந்தந்த தொல்லியல் அகழ்வைப்பகங்களில் காட்சிப்படுத்துவதற்கு முன்னர், வேதியியல் முறையில் பாதுகாக்க வேதியியல் பாதுகாப்புப் பிரிவுகள் சென்னை மற்றும் மதுரையில் உருவாக்கப்பட்டன. பின்னர், அதன் பணி புராதன சின்னங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் விரிவாக்கப்பட்டது. பராமரிப்பு பணிகள் நிதி மற்றும் நிதிக்குழு மானியத்தின் கீழ் பல்வேறு இடங்களில் வேதியியல் முறையில் பாதுகாப்புப் பணிகள் இத்துறையின் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பழம்பொருட்களை பதிவு செய்தல்**

**3.15** பழமையான கலைப் பொருட்கள் இந்தியாவிலிருந்து கடத்தப்படுவதைத் தடை செய்வதற்கு **1972** ஆம் ஆண்டு பண்டைக்கால பொருட்கள் மற்றும் கலை பொக்கிஷங்கள் சட்டத்தினை இந்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தினை தமிழகத்தில் நடைமுறைப்படுத்த இரு பதிவு

அலுவலர் அலுவலகங்கள், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்திற்காக அனைத்து செலவினத்தையும் மத்திய அரசே ஏற்றுக் கொண்டது. தமிழ் நாட்டில் **1974** ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதுவரை **44,675** பழம் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் பொருளாதார குற்றப்பிரிவின் கீழுள்ள சிலைத் திருட்டுப் பிரிவிற்கு திருடுபோன சிலைகள் பற்றிய அடையாளம் காட்டும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தினை மத்திய தொல்லியல் துறையால் பிப்ரவரி **2014** முதல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்**

**3.16** இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பெருமைமிக்க அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இச்சிறந்த வள ஆதார மையமானது முனைவர்பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏதுவாக **1869** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்நூலகத்தில் கணிதம், வானசாஸ்த்திரம், சித்தா,

ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபி மற்றும் பாரசீக மொழிகளில் **72,748**–க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் **25,373**–க்கும் மேற்பட்ட பல மேற்கோள் காட்டப்படும் நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**3.17** சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் ரூ.**119.32** இலட்சம் செலவில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு **2012–2013**ஆம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

**3.18** இது போல், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள அரிய ஓலைச் சுவடிகளை நுண்படம் மூலம் பாதுகாக்க **2012–2013** ஆம் ஆண்டில் ரூ.**3.54** கோடி சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் எல்காட் நிறுவனம் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தேசிய சுவடிக் குழுமம் (MRC)**

3.19 புதுடெல்லியிலுள்ள தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து அதன் விவரங்களை குறுந்தகடுகளில் எண்ணிலக்கம் செய்யும் பணிக்கு, தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் சுவடிகள் வள ஆதார மையமாக (MRC) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.20** இதுவரை **32,958** சுவடிகள் மின்தரவாக்கத்தின் மூலம் எண்ணிலக்கம் செய்யப்பட்டு புதுடெல்லியிலுள்ள தேசிய சுவடிக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழர்களின் பண்பாடு, வானவியல் போன்ற தொடர்புடைய விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

## 2013–2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் துறையின் வளர்ச்சி பணிகள்

### 3.21 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

**1)** விழுப்புரம் மாவட்டம் பெருமுக்கல் கிராமத்தில் அமைந்துள்ள பாண்டியர் – விஜயநகர காலத்திய 70 கல்வெட்டுகளுடன் கூடிய செங்கல் கட்டுமான ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயிலை ரூ.100 இலட்சம் செலவில் சீரமைத்து பாதுகாத்தல்.

**<u>தற்போதைய நிலை</u>**

அரசாணை (நிலை) எண். 12, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2)த் துறை, நாள். 23.01.2014–ல் விழுப்புரம் மாவட்டம் பெருமுக்கல் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயிலில் பாதுகாப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொல்லியல் ஆலோசகர் / பாதுகாப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2) தமிழ்நாட்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளை ரூ. 50 இலட்சம் செலவில் எண்ணிலக்கம் செய்து அதனை கணினி மென்பொருள் மற்றும் வன்பொருளில் பதிவு செய்தல்.

**தற்போதைய நிலை**

2013–2014ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளை வன்பொருளில் பதிவு செய்யும் பணிகளுக்கு ரூ. 20 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ‘எல்காட்’ நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதுவரை 1,215 படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் எண்ணிலக்கம் செய்யப்பட்டு மல்டி மீடியா முறையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**3.22 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்**

i) **"அறிந்து கொள்ளுங்கள் உங்கள் பாரம்பரியத்தை’’** என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாணவர் சமுதாயத்திற்காக ரூ.2.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளுதல்.

**<u>தற்போதைய நிலை</u>**

மாணவர் சமுதாயத்திடம் பண்டைய மரபு மற்றும் அதனை பழமை மாறாமல் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக புராதன நடை, தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கு கல்வெட்டுகள் குறித்த பேச்சு, ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர் **(21.01.2014)**, சென்னை **(30.01.2014)**, தஞ்சாவூர் **(18.02.2014)** மற்றும் மதுரை **(12.03.2014 & 13.03.2014)** ஆகிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் மாணவர்கள் மற்றும் பொது மக்களிடம் பொதுவான பெரும் செயல் விளைவுகளை ஏற்படுத்தியது.

ii) திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள அகழ்வைப்பக வளாகத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பில் **“தொல் பழங்கால பூங்கா”** அமைத்தல்.

**<u>தற்போதைய நிலை</u>**

தொல் பழங்கால பூங்கா அமைத்தல் தொடர்பான பணிகள் கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரியின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

iii) மதுரை, மனோரா, தரங்கம்பாடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய அகழ்வைப்பகங்களுக்கு நுழைவுக் கட்டணம் வழங்க 8 நவீன கையடக்கக் கருவிகள் ரூ.20.00 இலட்சம் மதிப்பில் வாங்குதல்.

**தற்போதைய நிலை**

நுழைவுக் கட்டண 8 நவீன கையடக்கக் கருவிகள் எல்காட் நிறுவனம் மூலம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 8 நவீன கையடக்கக் கருவிகள் விரைவில் எல்காட் நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளது.

iv) ரூ.15 இலட்சம் செலவில் 2001–2006ஆம் ஆண்டில் தொல்லியல் நினைவுச் சின்னங்கள் மற்றும் இந்துசமய அறநிலையத் துறையின் கோயில்களில் மேற்கொள்ளப்பட்ட மறு சீரமைப்புப் பணிகள் போன்று தொன்மை பேணும் மற்றும் தரமானதாக அமையும் வகையில் பணி நிறைவு பெற்ற தொல்லியல் பாதுகாப்புப் பணியில் அனுபவம் நிறைந்த தொல்லியல் வல்லுநர் ஒருவரை ஆலோசகராக நியமனம் செய்தல்.

**<u>தற்போதைய நிலை</u>**

தமிழக அரசு இத்திட்டத்திற்காக திரு. கே.டி. நரசிம்மன், தொல்லியல் கண்காணிப்பாளர் (ஓய்வு), இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை, அவர்களை தொல்லியல் ஆலோசகர் / பாதுகாப்பாளராக நியமனம் செய்து **அரசாணை (நிலை) எண். 171, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 29.06.2013**–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாநில தொல்லியல் துறையின் கீழ் உள்ள அதிக எண்ணிக்கையிலான சின்னங்கள், தேசிய கலைக்கூடம் மற்றும் பல கோயில்களுக்கு தொல்லியல் ஆலோசகர் / பாதுகாப்பாளர் அவர்களால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உலக மரபு வார விழா – நவம்பர் 19 முதல் 25 வரை, 2013**

**3.23** ஆண்டுதோறும் நவம்பர் திங்கள் 19 முதல் 25 வரை இத்துறையால் உலக மரபு வார விழா நடத்தப்பட்டுவருகிறது. 2013–2014 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் கரூர் தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த "உலக மரபு வார விழா" நடத்தத் திட்டமிடப்பட்டது.

**3.24 தருமபுரி –** தருமபுரி அகழ்வைப்பகத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சியர், தலைமையில் ஒரு நாள் கருத்தரங்கு நிகழ்த்தப்பட்டது. இக் கருத்தரங்கில் சுமார் 180 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ / மாணவியர் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர் சமுதாயத்தினருக்கு தருமபுரி மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள தொல்லியல் மரபுச் சின்னங்களை பாதுகாக்கும் முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**3.25 கரூர் –** கரூர் அகழ்வைப்பகத்தில் கரூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சியினை சுமார் 1,000 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ / மாணவியர் பார்வையிட்டு, தமிழகத்தின் மரபுச்சின்னங்கள் மற்றும் பண்பாட்டுப் பெட்டகங்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டனர்.

**தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (BAPASI) நடத்திய கண்காட்சியில் துறை வெளியீடு குறித்த புத்தக அரங்கு**

**3.26** தொல்லியல் துறை முதல்முறையாக புத்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டு பொது மக்கள் மற்றும் ஆய்வாளர்களின் நன்மைக்காக இத்துறை வெளியீடுகளை விற்பதற்காக புத்தக அரங்கினை **10.01.2014** முதல் **22.01.2014** வரை அமைத்தது. எதிர்பார்த்தது போல அனைத்து தரப்பட்ட மக்களிடமிருந்து ஆர்வமும் ஆதரவும் பெறப்பட்டு ஏறத்தாழ **3,000** தொல்லியல் நூல்கள் விற்பனை செய்யப்பபட்டு, அதன் மூலம் ரூ.**2,00,000/–** வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இவ்விற்பனை மூலம், தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்து கொள்வதற்கு இப்புத்தகங்கள் மதிப்பு மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது என புத்தகங்களை வாங்கியவர்கள் மூலம் அறியப்படுகிறது.

**விருப்புரிமை நிதி**

**3.27** தொல்லியல் துறை பார்வையாளர்கள் கட்டணத்திலிருந்து விருப்புரிமை நிதி ஒவ்வொரு ஆண்டும் பாதுகாக்கப்பட்ட சின்னங்களை முறையாக பராமரிப்பதற்கும், அகழ்வைப்பகங்களை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கும், கல்விசார் மற்றும் தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்வதற்கும் **2011–2012** முதல் ஆண்டுதோறும் ரூ.**10** இலட்சம் ஒப்பளிக்கப்படுகிறது.

## 3.28 2013–2014 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய நிகழ்வுகள்

- ❖ திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்திலுள்ள சின்னயன்குளம் சின்னத்திற்கு கம்பி வலை அமைத்தல், மின் விளக்கு வசதிகள், கழிப்பறை கட்டுதல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், புல்வெளித் தளம் அமைத்தல் போன்ற உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு ரூ.24.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, தொல்லியல் / பாதுகாப்பு ஆலோசக வல்லுநர் அவர்களால் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் பேரில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளன.
- ❖ தமிழ்நாடு கல்வெட்டு தொகுதி – V என்னும் தலைப்பில் கல்வெட்டு நூல் ரூ.1.10 இலட்சம் மதிப்பில் அச்சிட்டு வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டு, நூல் வெளியிடப்பட்டது.
- ❖ அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள சுவடிகளை பாதுகாக்க

வேதியியல் பொருட்கள் மற்றும் பைண்டிங் பொருட்கள் ரூ.1.50 இலட்சம் மதிப்பில் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு, பொருட்கள் அனைத்தும் வாங்கப்பட்டு தொகை செலவழிக்கப்பட்டது. பணி முடிக்கப்பட்டு விட்டன.

- ❖ தலைமை அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு நான்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.2.00 இலட்சம் மதிப்பில் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு, கணினிகள் மற்றும் உபகரணங்கள் எல்காட் நிறுவனம் மூலம் வாங்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. பணி முடிக்கப்பட்டுள்ளது.
- ❖ திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியில் அகழாய்வுப் பணி மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அகழாய்வு பணி முடிக்கப்பட்டுவிட்டது. அகழாய்வில், ஆயிரங்கால் மண்டபத்தில் மண்ணில் புதையுண்டிருந்த அழகிய யானைப் புடைப்பு சிற்பம் மற்றும் மனித உருவங்கள் அடங்கிய சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதில் ஒரு மனித உருவம் யானைக்கு முன்புறத்தில்

நின்ற நிலையில் யானையினுடைய துதிக்கையை பிடித்தவாறும், மற்றொரு மனித உருவம் யானையினுடைய பின்புறத்தை அங்குசம் போன்ற ஆயுதத்தை கொண்டு குத்துவது போன்று அமைந்துள்ளது. அகழாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வரப்படுகின்றது.

❖ திருச்சி மாவட்டம், லால்குடி தாலுக்கா திருவெள்ளறையில் அமைந்துள்ள ஸ்வஸ்திக் கிணற்றின் உட்புற வேலியினுள் கருங்கல் தளம் மற்றும் மழைநீர் உறிஞ்சுத்தொட்டி போன்ற உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு ரூ.25.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, தொல்லியல் / பாதுகாப்பு ஆலோசக வல்லுநர் அவர்களால் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் பேரில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

❖ தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சரபேந்திரராஜப்பட்டினத்தில் அமைந்துள்ள மனோரா நினைவுத் தூணில் இடிதாங்கி அமைத்தல் மற்றும்

பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ.12.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, தொல்லியல் / பாதுகாப்பு ஆலோசக வல்லுநர் அவர்களால் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் பேரில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

- இத்துறையின் ஐந்து சின்னங்களின் மாதிரிகளை {1) தரங்கம்பாடி கோட்டை – தரங்கம்பாடி, 2) அரண்மனை வளாகம் – தஞ்சாவூர், 3) வெட்டுவான் கோயில் – கழுகுமலை, 4) கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில் – கூழம்பந்தல் மற்றும் 5) ஜீனசுவாமி கோயில் – திருப்பருத்திக்குன்றம்} செய்து பொதுமக்களின் பார்வைக்காக துறையின் அகழ்வைப்பகங்களில் காட்சிப்படுத்துவதற்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் மூலம் தமிழ்நாடு அரசு கலை மற்றும் பாரம்பரிய சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம் வசம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**புதிய திட்டங்கள்**

**3.29 2014–2015 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன:–**

| **வ. எண்** | **திட்ட விவரம்** | **திட்ட மதிப்பு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1) | இத்துறையின் 14 அகழ்வைப்பகங்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பு (R.O Systems) அமைப்புகள் அமைத்தல் | **10.00** |
| 2) | தருமபுரி அகழ்வைப்பகம் மற்றும் பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகம் ஆகியவற்றில் காட்சிப்படுத்துதல் பணிகளை மேம்படுத்துதல் | **13.00** |
| 3) | இத்துறையின் 10 அகழ்வைப்பகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் | **10.00** |
| 4) | இத்துறையின் அகழ்வைப்பகங்களில் கருத்தரங்கு மற்றும் கண்காட்சிகள் நடைபெறும் போது தொல்பொருட்கள் மற்றும் அதனின் விவரங்களை காட்சிப்படுத்துவதற்கு ஏதுவாக மடக்கு வகை காட்சிப்பலகைகள் வாங்குதல் | **10.00** |
| 5) | இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் உக்கிரன்கோட்டை ஆகிய வரலாற்று சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளல் | **6.00** |
| 6) | இத்துறையின் தஞ்சாவூர் மண்டல அலுவலகத்தில் பணிபுரியும் நிழற்படமெடுப்பவருக்கு ஒரு மடிக்கணினி, ஒரு வீடியோ கேமரா மற்றும் ஒரு டிஜிட்டல் கேமரா வாங்குதல் | **2.00** |

| | | |
|---|---|---|
| 7) | சப்த ரிஷி நாடி நூலின் ஆறு தொகுதிகளை மறுபதிப்பு செய்தல் (மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி இலக்னம்) மற்றும் புதியதாக ஆறு தொகுதிகளை பதிப்பித்து வெளியிடுதல் (துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்) | **30.00** |
| 8) | தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – VI &VII ஆகிய இரண்டு கல்வெட்டு நூல்கள், நான்கு மாணவர்களின் ஆய்வேடுகள் மற்றும் ‘ஆலம்பரை’ அகழாய்வு அறிக்கை ஆகியவற்றை நூலாக வெளிக்கொணர்தல் | **7.40** |
| 9) | அரியலூர் மாவட்டம், ஜெயம்கொண்டம் வட்டம் கங்கைகொண்ட சோழபுரம் அருகிலுள்ள மாளிகைமேடு பகுதியில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடத்தில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **25.00** |
| 10) | அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள அரிய முக்கியத்துவம் வாய்ந்த 14 நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிடுதல் | **18.00** |
| | **மொத்தம்** | **131.40** |

**முடிவுரை**

தொல்லியல் என்பது அறிவியல் சார்ந்த பண்டைய மனிதர்கள் விட்டுச் சென்ற எச்சங்களைக் கொண்டு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை மற்றும் பண்பாட்டினை அறிந்து கொள்ள உதவும் படிப்பாகும். பலதரப்பட்ட ஆராய்ச்சி

மேற்கொள்ளப்படுவதால் தொல்லியலை அறிவியல் மற்றும் கலை ஆகிய இரண்டையும் கொண்டதாகவும் கருதப்படலாம். மேலும், தொல்லியல் மரபு மற்றும் வரலாற்று சின்னங்கள் பண்டைய காலத்தில் நிலவிய கலை மற்றும் கட்டடக்கலையை பிரதிபலிப்பதுடன் நமது மூதாதையர்களின் பொறியியல் அறிவினை வெளிப்படுத்துகிறது. தமிழ்நாட்டின் மரபுகளை பாதுகாக்கும் கடமையினை தொல்லியல் துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அதன் மூலம் பண்டைய தமிழ்நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பண்பாட்டு சமூக நிலையை வெளிப்படுத்துகின்றது.

**கே.சி.வீரமணி**
**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்**

.